உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ௬௨ Vol. 62	திருவள்ளுவர் ஆண்டு 1996 குரோதி — ஆனி — ஆவணி 1965 June to Aug.	பகுதி ௩ No. 3

உள்ளுறையும் இறைச்சியும்

(பேராசிரியர், ஆ. சிவலிங்கனுர், மயிலம்)

—✱—

(சென்ற இதழ் 163–ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பு:

சிறப்பு என்பது உள்ளுறைப் பொருளைத் தரும் கருப் பொருளைச் சிறப்பிக்க வரும் உவமையாம். கருப் பொருளால் பெறப்படும் உள்ளுறைப் பொருளை இந்த உவமையிலிருந்தும் பெறலாம். என்றாலும் இவ்வுவமை கருப் பொருளைச் சிறப்பிக்க வந்ததாகவே கருதப்படும்.

தலைவியைப் பிரிந்த தலைவன் காமக்கிழத்தி மனையில் உறைவானானான். அவன் ஒரு நாள் பரத்தையர் பால் பிரிந்திருந்தான் அது பொறாத காமக்கிழத்தி மனம் புலந் திருந்தாள். அதனையறிந்த தலைவன் அவளைச் சமாதானப்

படுத்திச் சார்ந்தான். அப்போது அவள் அவனிடம் சில கூற விரும்பியவள் அவனைப் பார்த்து,

"விரிகின்ற கதிரையுடைய ஞாயிறு விசும்பில் பரவ, முறுக்குண்ட தலைகள் கட்டவிழ்ந்த பூக்களில் சேர்ந்து கள்ளை நுகர்ந்து விளையாடிய வண்டு அதனுடும் அமையாது மீண்டும் நுகர வேண்டி அங்கேயே சுற்றிக்கொண்டு கிடக்கும்படியான செல்வமிக்க பொய்கையில், பசிய இலைகளுடன் கூடிய தாமரையின் தனிமலர் ஒன்று தன்னை வருத்தும் பனியானது ஒரு பக்கம் வடியத் தான் அழகில்லாமல் மலரும் துறையையுடைய ஊரில் உள்ளவனே" என்று விளித்தாள். இவ்வாறு விளித்தவள் பனியால் அழகின்றி மலரும் தாமரைக்குக் காதலன் பிரிவால் வருந்தியழும் தலைவியை அவன் வந்து அருள் செய்யும்போது அவ் வருத்தம் முற்றும் நீங்காத நிலையில் சிரிக்கும் அவள் முகத்தை உவமை கூறினள். காமக்கிழத்தி கூற்றாக வந்த பாடலில் உள்ள மேற்கருத்துகள் அமைந்த வரிகளைக் காண்போம்.

"விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கட் புணர்ந்தாடி
வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுட்
டுனிசிறந் திழிதரும் கண்ணினீர் அறல்வார
இனிதமர் காதலன் இறைஞ்சித்தன் அடிசேர்பு
நனிவிரைந் தளித்தலின் நகுபவள் முகம்போலப்
பனியொரு திறம்வாரப் பாசடைத் தாமரைத்
தனிமலர் தளைவிடூஉம் தண்டுறை நல்லூர"

(கலி. 71.)

இவ் வரிகளில், "விரிகதிர்...... பொய்கை" என்ற வரி

கள் வரையிலும் உள்ள பகுதியில் ஓர் உள்ளுறை யுண்டு. அதாவது,

"விடியற்காலத்தே செவ்விய பூவிடத்துக் கள்ளை வண்டு நுகர்ந்து விளையாடி அதனானும் அமையாது பின்னும் நுகர்தற்கு அவ்விடத்தைச் சூழ்ந்து திரியும் செல்வம் மிக்க பொய்கை என்றதற்கேற்பக் காதலன் வைகறைக் காலத்து மனைவயிற் செல்லாது இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி அதனானும் அமையாது பின்னும் அவரைப் புணர்தற்குச் சூழ்ந்து திரிகின்ற இவ்வூர்" என்பதாம். இவ்வுள்ளுறை பற்றி யீண்டு நோக்க வேண்டுவதில்லை. அடுத்து வருவதே நோக்க வேண்டுவதாம்.

"பனியொரு...... தளைவிடூஉம்" என்ற வரிகளில் உள்ள உள்ளுறையே நோக்கவேண்டுவதாம். அதாவது,

"தனித் தாமரை யொன்று தன்னை வருத்தும் பனி பக்கம் வார அதனால் பொலிவின்றி விரிகதிர் மண்டிலம் விசும்பூர்தலினால் தளைவிட்டு மலரும் என்பதால், நின் பிரிவு என்னை வருத்த அதனால் கண்ணீர் வார அழுத என்னை அஃதுணர்ந்து நீ வருதலின் என்னைச் சிறிது செவ்விபெற வைத்தனை என்றாள் காமக்கிழத்தி" என்பதாம். இவ்வுள்ளுறைப் பொருள் தந்த தாமரையாகிய கருப் பொருளைத் "துனி சிறந்திழி தரும்......முகம்" என்ற வரிகள் உவமை முகத்தால் சிறப்பிக்க வந்தன. இவ்வுவமையிலிருந்தும் "பனியொரு...... தளைவிடூஉம்" என்ற வரிகளால் அதாவது தாமரை மலராகிய கருப் பொருளால் கொள்ளப்பட்ட உள்ளுறைப் பொருளைக் கொள்ளலாம்.

"துனிமிகுதலாலே பெருக்கு மாறாது வீழ்கின்ற கண்ணீர் காமத் தீயாற் சுவறி அறுதலையுடைத்தாய் ஒழுக அவ் வருத்தத்தைக் கண்டு விரைந்து கணவன் அருளுதலின் சிறிது மகிழ்வாள் மிகம்போல என்பதால், நின்னைப்பெறாது சுற்றத்தாரிடத்திருந்து கண்ணீர் வாரா நிற்க நீ ஒருகால் அளித்தலில் சிறிது செவ்வி பெற்றுளாய் இருக்கும்படி வைத்த தலைவியைப் போல எம்மையும் வைக்கின்றாய்" இப்படியாகக் காமக்கிழத்தி கூறியதாகக்கொள்ளவேண்டும். இவ்வுவமையால் பெறப்படும் உள்ளுறையைப் 'பனியொரு...... தலைவிடூஉம்" என்ற பகுதிக் கருப் பொருளே தருதலின் இவ்வுவமை உள்ளுறைப் பொருளைத் தர வந்ததன்று; கருப்பொருளைச் சிறப்பிக்கவே வந்ததாம் எனக் கொள்ளவேண்டும். எனவேதான் இவ்வுவமை, சிறப்புவமையாயிற்று. தன் மூலமாகவும் உள்ளுறை கொள்ளுமாறு அமைந்தும் அவ்வாறு கொள்ளவேண்டாமல் கருப்பொருளையே சிறப்பித்து நிற்றலின் உள்ளுறை உவமத்தைச் சிறப்பிக்கும் ஏனையுவமம் எனப்பட்டது இது.

இதுகாறும் உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்ற ஐவகை யுள்ளுறைகளைப் பற்றி இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறிய கருத்துகளை எழுதினோம். அவ்விருவரும் அவற்றிற்கு மூலமாகக் கொண்ட தொல்காப்பிய நூற்பாக்கள் பின் வருவனவாம்:—

1, உடனுறை யுவமம் சுட்டு நகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை யைந்தே
(தொ. பொருள். 242)

2. உள்ளுறை யுவமம் ஏனையுவமம் எனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே
(தொ. பொ. 46)

3. உள்ளுறுத் திதனெடு ஒத்துப்பொருள் முடிகென
வுள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம்.

(தொ. பொருள் 48)

4. இறைச்சி தானே பொருட்புறத் ததுவே

(தொ. பொருள். 229)

5. இறைச்சிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறந்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே

(தொ. பொருள். 230)

6. அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வற்புறை யாகும் வருந்திய பொழுதே

(தொ. பொ. 231)

இனி இவ்வுள்ளுறைகள் பற்றி உரையாசிரியர் இருவர் கருத்துகளையும் ஆராய்வாம்.

காந்தளூர்ச் சாலை

—✻—

(இர. பன்னீர்ச்செல்வம், எம். ஏ.)

ஆராய்ச்சி மாணவர்,

திருவனந்தபுரம்

''காந்தளூர்ச் சாலை கலமறுத்து அருளி'' என்ற சாசனத் தொடர் வரலாற்று ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் தம் உள்ளத்தில் நின்று பலவேறு கருத்துக்களுடன் வெளிவந்து மேலும் மேலும் விவாதத்துக்குரிய தொடராகவே இருந்து வருகின்றது. அறிஞர் பலரது கருத்துக்களை முறையே ஈண்டு ஆய்ந்து அவர்தம் முடிவுகள் பொருந்து மாற்றைக் காண்போம்.

கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் [அதாவது கொல்லம் 2வது நூற்றாண்டில்] ஆய் வேளிரது (சேரரது) தென் எல்லையாக இருந்தவை விழிஞமும், காந்தளூர்ச் சாலையுமாகும். இவற்றின் துணையால் சோழப் படையெடுப்புக்களை எதிர்த்துக் காத்துக் கொண்டனர். இங்கு குருதிப் பெருக்கு ஆறென ஓடும் பெரும் போர்கள் நிகழ்ந்தன என்று இளங்குளம் குஞ்சன் பிள்ளை கருதுகின்றார் மேலும் அவர், இங்குப் போர்ப் பயிற்சிக்காக மாணவர்கள் வந்து நிறைந்தனர். சாலையும் வலிமையுடையதாக ஆக்கப்பட்டது; அவ்வாறு ஆகும் காலத்து அது முக்கியமானதொரு படைத் தளமாக இருந்தது என்றும், அதனால் முதலாம் இராசராசன் முதன்முதலில் இதனை எதிர்த்தான் என்று கல்வெட்டுக்களில் அவனது மெய்க்கீர்த்திகள் கூறுகின்றன என்றும் கூறுகின்றார்.

காந்தளூர்ச்சாலை கடற்றுறைப் பட்டினம் இங்கு கப்பல்கள்

வந்து செல்லும். அவ்வாறு வந்த கப்பல்களை-மரக் கலங்களை அழித்தான் என்று வேறு சில வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர்.

திரு. தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், 'கலம்' என்பதற்கு உணவுண்ணும் பாத்திரம் என்றும் 'அறுத்தல்' என்பதற்கு வகைசெய்தல் என்றும் பொருள்கொண்டு உணவுப் பரிமாற்றத்துக்கு வகைசெய்து அருளியதைக் குறிப்பதே இத்தொடர் எனப் பல ஏதுக்கள் காட்டிச் செல்கின்றார். இளங்குளம், 'கலம்' என்பதற்கு 'இடம்' என்றும் 'அறுத்தல்' என்பதற்கு 'அழித்தல்' என்றும் பொருள் கொள்கின்றார். ஆனால் 'கலம்' என்பதற்கு இடம் என்ற பொருள் ஏற்புடைத்தது ஆகாது. 'களம்' என்றும் குறிக்கப்படவில்லை. எனவே 'கலம்' இடத்தை உணர்த்தும் என்பது ஆதாரமற்றதாகின்றது. 'அறுத்தல்' என்பதும் 'அழித்தல்' என்ற பொருளைத் தருவதன்று. அறு—அறுதி—அறுத்தல்—கூறுபாடு செய்தல், வகை செய்தல், பகுத்தல் என்ற பொருளில்தான் வழங்கியுள்ளது.

திரு. சங்கு ஐயர் அவர்கள் 'கலம்' என்பது 'ஆயுதப் பொது' என்றும் 'சாலை' ஆயுதங்கள் வைத்திருந்த சாலை-படைக் கொட்டில் என்றும் பொருள்கொண்டு சேரர்தம் படைக்கொட்டிலை அழித்தான் என்பதே ஏற்புடைத்து என்று பல ஏதுக்களால் கூறுகின்றார். திரு. கே. வி. கிருஷ்ண ஐயரும் இதே கருத்தினை உடன்பட்டுக் கூறுகின்றார்.

இவ்வாறு பலவேறு கருத்துக்களில் நிலவி வருகின்ற இத்தொடருக்கு என் வி. கிருஷ்ண வாரியார் மேலும் ஓர் கருத்தினைக் "'கலம் அறுக்கல்' ஐயத்துக்கு இடமான இத் தொடருக்குப் புதிய ஒரு விளக்கம்'' என்ற கட்டுரையில் கூறுகின்றார். இவர் தமது கருத்துக்கு "அர்த்த சாஸ்திரத்திலிருந்து'' ஆதாரம் காட்டுகின்றார். அந்நூலில் 'சம்யா நீய' என்ற தொடர் 'கலம் அறுபட்டினம்' என்ற பொருள் தருவதாகவும் 'கலம் அறுக்கல்'

சுங்கச் சாவடியில் வந்திறங்கும் பொருள்களைச் சோதனை செய்ய 'சீல்'களை உடைத்தல் என்றும், மதுபானப் பொருள்கள் ஜாடி களில் வந்திறங்கினவாதலால் அவை கலம் எனப்பட்டது என் றும் பொருள் செய்து, அவ்வாறு சோதனைக்காகச் 'சீல்' உடைத்தல் என்றும், மதுபானப்பொருளை ஜாடிகளில் வந்திறங் கினவாதலால் அவை கலம் எனப்பட்டது என்றும் பொருள் செய்து, அவ்வாறு சோதனைக்காகச் 'சீல்' உடைத்தலை அரசன் மேற்பார்வை செய்தான் என்பதையே அத்தொடர் குறிக்கலாம் என்று முடிவு செய்கின்றார். இக் கருத்து ஏற்புடையதன்று, என்னை? அராபியாவிலிருந்து குதிரைகளும், ஈழத்திலிருந்து யானைகளும் வந்திறங்கின என்று கூறும்போது இவை ஜாடிகளில் வந்திறங்கின என்று கொள்ளமுடியாது!

'சாலை' என்ற சொல் எதைக் குறிக்கின்றது? மன்னார் வளைகுடாத் துறைப் பகுதியில் 'சாலையூர்' என்ற ஒரு கடற் றுறைப் பட்டினம் இருந்தது என்பதையும் நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். இராசாதிராசன் சாசனத்தில், 'வீர பாண்டியன் தலையும் சேரளன் சாலையும், இலங்கையும் தண்டாற் கொண்டு' என வரும் பகுதியினை ஆய்ந்தால் பாண்டியனை வென்று, சேரனுக்குச் சொந்தமான சாலையூரைக் கைப்பற்றி, அத்துறைமுகத்தைப் பயன்படுத்திக்கொண்டு இலங்கை சென்று வெற்றிகொள்கின்றான் என்ற பொருள் அமைதியினைக் காண லாம். இதற்கு ஏற்பவே, 'சாலை கொண்டதும் தண்டு கொண்டல்லவோ' என்ற கலிங்கத்துப் பரணியும் அமைந் துள்ளது. எனவே சாலையூர் போர்க்களமாக இருந்தது என்பதற்கு அதன் துறைமுகத்தன்மை காரணமாக உள் ளது. அதைக் கைப்பற்றுதல் பெருமையாகவும், பயனுடைத்த தாகவும் இருந்துள்ளது. கடல் வாணிகமும், கடற்படையும் சிறப்பதற்கு அது ஏற்றதாக இருந்துள்ளது எனவே சாலைப் போர் வேறு இடங்களிலும் குறிக்கப்பட்டுள்ளது. காந்த ளூரில் உள்ள சாலை வேறு.

கல்வெட்டுக்களின் துணைக்கொண்டும். பொருள் அமைதியின் முறைகொண்டும் 'காந்தளூர் சாலை கலமறுத்தருளி' என்பதற்கு ஒரு முடிவு காண்போம்.

கருநந்தடக்கன் என்ற மலைநாட்டு மன்னனது சாசனம் ஒன்று காந்தளூர் 'சாலை' பற்றிய விளக்கத்தைக் காட்டுகின்றது அதோடு 'கலமறுத்த' செய்தியையும் விளக்குகின்றது. இக் கல்வெட்டின் காலம் கி. பி. 869. கல்வெட்டுப் பகுதி பின் வருமாறு:—

"இந்நிலம் பிடிசூழ்ந்து ஸ்ரீ கோயில் எடுத்து
விஷ்ணு பட்டாரகரை
ப்ரதிஷ்டை செய்து பார்த்திவ சேகரபுரம் என்று
பேர் இட்டு காந்தளூர்
மர்யாதியால் தொண்ணூற்று ஐவர் சட்டர்க்கு
சாலையும் செய்தான்
ஸ்ரீ கோக் கருநந்தடக்கன்"

என்பது. இதனால் நாம் அறிவது, காந்தளூர் ஊர்ச் சபையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப 95 பேர் பிராமணர்கள் இருக்க ஒரு சாலையையும் செய்வித்தான் என்பதே அடுத்த பகுதிகளில் தானம் செய்த நிலம் அவற்றது அளவு முதலியனவற்றைக் காண்கிறோம். பின்னர் உணவுக்கு வேண்டிய வழிமுறைகளை வகைசெய்த செயலைக் குறிப்பிடுகின்றது அச் சாசனம். அது வருமாறு:—

"இச்சாலைக்குப் பெய்த கலத்தில் பவிழிய
சரணத்தாருடைய கலம்
நாற்பத்தைந்து. தயித்திரிய சரணத்தாருடைய
கலம் முப்பத்தாறு.

தலவகார சரணத்தாருடைய கலம் பதினறு.
இனிவரும் கலம்
மூன்று சரணத்தார்க்கும் ஒப்பது''

என்பது. இதில் கலம் அறுதி செய்த செயலைக் காண்கிறோம். தானம் செய்த நிலத்திலே வருகின்ற வருவாய் எவ்வளவு கலம் என்பதையும் அந்த வருவாயில் மூன்று சரணத்துப் பிராமணர் களுக்கும் எவ்வளவு எவ்வளவு பகிர்ந்து கொடுத்தல் வேண்டும் என்ற வரையறையும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இவ் வாறு ஆனியற் பார்ப்பன மாக்களான சட்டர்கள் இருக்கும் இடத் தைப் படைக்கலக் கொட்டில் எனவும் ரத்தக் களரி எனவும் கூறு தல் எங்ஙனம் பொருந்தும்?

இனி இராசராசனது கல்வெட்டுப் பகுதியினைக் காண் போம் அதில் முதன் முதலாகக் குறிப்பிடப்படுவது இந்தத் தொடரே.

''ஸ்வஸ்தி ஸ்ரீ. திருமகள் போலப் பெருநிலச்செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர் சாலை கலமறுத்து அருளி''

என்று வருகின்றது. இதன் பின்னர் இவன் வென்ற நாடுகளின் பெயர்களைக் குறித்துள்ளார் மெய்க்கீர்த்தி பாடியவர். காந்தளூர்ச் சாலையில் கலமறுத்து அருளினன். பிற இடங்களைத் தன் படை பலத்தால் வென்று கொண்டான் என்பதே அம்மெய்க்கீர்த்திப் பகுதியின் பொருள். அவன் செய்த அறச்செயலை முதலில் கூறிப் பின்னர் அவனது வீரத்தைக் கூறுகின்ற முறை தானேயன்றி, அனைத்தும் அவனால் வென்றழிக்கப்பட்டது எனப் பொருள்படுவ தன்று. பகைவர் நாட்டினதேனும், நிலமகள் தனக்கு உரிமை யுடைய தன்மையினை நெஞ்சில் கொண்டு தொன்றுதொட்டு வழங்கிவரும் அறச்செயலுக்கு ஏதம் விளைக்காமல் ஈடுபாடுடைய

வனாக அருள் செய்கின்றான் தானும் கலங்கள் சில அறுதி செய்து தருகின்றான்.

இனி இராசேந்திரனது சாசனத்தைக் காண்போம்:-

''விடல்கெழு வில்லவன் குடர்மடிகொண்டு
தன்னாடு விட்டோடிக் காடுபுக்கு ஒளிப்ப
வஞ்சியம் புதுமலர் மலைந்து ஆங்கு எஞ்சலில்
வேலை கெழு காந்தளூர் சாலை கலமறுத்து''

என்று அப்பகுதி வருகின்றது. போர்மேற்செலவுற்றுச் சோழன் வருகின்றான். அவன் தன் வலிமைக்கு முன் நிற்கலாற்றாத சேரன் நாட்டை விட்டு ஓடிக் காட்டினுள் புகுந்து ஒளிந்து கொள்கின்றான். சோழன் சேர நாட்டுப் போர்க் களத்தில் எஞ்சுகின்றான். வெற்றியுடன் பூத்த வஞ்சியின் புதுமலரைப் புனைந்து எஞ்சி நின்ற அந்த நிலையில், அறநெஞ்சம் நன்றாக்க, வழங்கி வரும் 'சாலை'க்குக் கலம் அறுதிசெய்து மகிழ்கின்றான். அதன் பின் நடப்பது சாளுக்கியர் போர். இது வடபால் நிகழ்ந்தது. எனவே, சோழன் தென்திசையில் பாண்டி நாடு, வேணாடு இவற்றை வென்று, சேரலனும் ஓடிய ஒளிய, களத்தில் எஞ்சிய அவன் இந்த அறச் செயலைச் செய்தான் என்று கொள்ளுதல் எவ்வளவு சிறப்புடையதாகவும், ஏற்புடையதாகவும் உள்ளது.

இனிப் பராந்தக சோழனது சாசனத்தைக் காண்போம்:-

''சேரலனைச் செருவில் வென்று திறைகொண்டு
வாகை சூடிக்
கூபகர் கோன் மகள் கொடுப்பக் குல விழிஞம்
கைக்கொண்டு
கன்னிப்போர் செய்தருளிக் காந்தளூர் சாலை
கலமறுத்து
மன்னுபுகழ் மறையவாதம் மணியம்பலத்துள்
இனிதிருந்து''

என்று வருகின்றது. பல போர்களைச் செய்து வென்ற பராந்தகன் அறங்கருதி, விழிஞம் வெற்றிக்குப் பின் காந்தளூர் சாலைக்குத் தானம்–பழையவர்கள் செய்த மறைமாருமல்- செய்து மகிழ்கின்ருன். அக்காலை மறையவர்கள் தம் குழுவில் தானும் இருக்கின்ருன் என்பதே அம்மெய்க் கீர்த்திப் பொருளாகும். இவ்வாறு முன்னேர் செய்த தானச்செயலைப் பின்னர் வரும் அரசர்களும் வழுவாமல் மாருமல் செய்தனர் என்பதற்கு வேள்விக்குடிச் செப்பேடுகள் சான்று பகர்கின்றன. ''மேனுள் எங்குரவரால் தரப்பட்டதை எம்மாலும் தரப்பட்டது'' என்று வரும் அடி அப்பொருளை உணர்த்துவதன்ரே?

எனவே, இக் காரணங்களைக் கொண்டு நன்கு ஆராயுமிடத்து 'சாலை' என்பது 'அக்ர சாலை' - உணவுச் சாலை என்பதையும், 'கலம்' என்பது உணவுப் பொருளைக் குறிக்கின்றது என்பதையும், 'அறுத்தல்' வகைசெய்தலைக் குறிக்கிறது என்பதையும் ஐயமின்றி உணரலாம். தேசிகவிநாயகம் பிள்ளையவர்களின் முடிவும் இக் கருத்துக்கு ஆதரவாக இருக்கின்றது.

சொல் ஒற்றுமை ஒன்றினையே கருத்திற்கொண்டு பலரும் பலவேறு முடிவுகளைக் கூறிச் சிக்கலை அதிகரிக்கின்றனர். சிறிதேனும் அதன் உண்மைப் பொருளினை உணர்ந்து, அப்பொருட்பெற்றியினை ஆராய்ந்தால் இவ்வாருன கருத்து வேற்றுமைகள் எழா.

கையாண்ட நூல்கள்:-

1. ஜெர்னல் ஆஃப் இண்டியன் ஹிஸ்டரி,
வால். 40 பகுதி 3.
2. மஞ்சரி. ஜூலை, 1965.
3. திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரீஸ் வால் 1.
4. தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் வால் 3 பகுதி 1.
5. எபிகிராபிகா இண்டிகா, வால். 17 எண் 16.

துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்

(ஆ. சிவலிங்கனார், மயிலம்)

(சென்ற இதழ் 28-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாழ்ந்தோர் உயர்வர் என்றுமிக
உயர்ந்தோர் தாழ்வர் என்றுமறஞ்
சூழ்ந்தோர் உரைக்கும் உரைகண்டாம்
மதில்சூழ் கிடந்த தொல்லகழி
தாழ்ந்தோர் அனந்தன் மணிமுடிமேல்
நின்றன் றுயர்ந்து தடவரையைச்
சூழ்ந்தோர் வரையின் உதிப்பவன்தாட்
கீழ்நின் றதுபோய்ச் சூழெயிலே''

(பிரபு-மா. உற். 14)

இதனகத்து ''பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து'' (978) என்ற குறளுக்கு விளக்கம் உவமை முகத்தாற்றரப்பட்டுளது. 'விளவல நாட்டில் அகழ் ஆழ்ந்திருக்கின்றது. மதில் மிகவும் உயர்ந் திருக்கின்றது. அகழ் ஆழ்ந்தமையால் உலகைத் தாங்கும் ஆதிசேடன் முடியில் தங்கியது. மதில் உயர்ந்தமையால் மேலே ஞாயிற்றின் கீழ்ப்பட்டது. இதனால், ''தருக்கின்றித் தாழ்ந்திருப்பவர் உயர்வடைவர்; தருக்கால் நிமிர்ந்திருப்பவர் தாழ்வடைவர்'' என்று அறநெறியாளர் கூறும் கூற்றுக்கு உரையறிந்தோம்'' என நம் அடிகள் மேற்குறளுக்கு விளக் கம் கூறியமை மிக அழகுடையதொன்றன்றோ? மேற்குற

ளின் அகலவுரையில் பரிமேலழகர் "இதற்கு; உயர்ந்தோர் தாழ்வர், தாழ்ந்தார் உயர்வர்; இஃதொரு விரோதம் இருந்தவாறென்னே என உலகியலை வியந்து கூறிற்ருக்கு வாருமுளர்" என எழுதிய உரையே நம் அடிகளால் மேற் கொள்ளப்பட்டதாகும்.

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா னிடையை-மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பறித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து

(நூல். நா. மாலை. 33)

இப் பாடல் குறளுக்கு மறுப்புக் கூறுவது போன் றுளது. 'அறத்தின் பயனை உலகில் சிவிகையிற் செல் வோனையும் தாங்குவோனையும் கொண்டு அறிக' என்ற கருத்தை சம்பந்தரின் சிவிகையைத் தாங்கிஞராகிய சைவ அடியார்கள் மறுத்தார்களாம். எங்ஙனமெனின், அறம் புரிந்தோன் சிவிகையூர, மற்றவன் அதனைப் புரியாமையால் தாங்குகின்ருன் எனினும் 'சம்பந்தர் சிவனடியார் ஆதலின் அவரது சிவிகையினைத் தாங்கும் பேறு யாவருக்கும் வாய்க் காது. முற்பிறவியில் அறம் புரிந்தவர்கட்கே வாய்க்கக் கூடியது. அங்ஙனம் வாய்த்தவர்கள் மறுபிறப்பில் இறை யுலகெய்துவர். ஆதலின் சம்பந்தர் சிவிகையினை அறம் புரிந்தமையால் நாங்கள் தாங்குகின்றேம். அதனுல் 'அறத்தாறிதுவென' என்ற குறள் எங்கட்கு ஒவ்வாது' என்று சம்பந்தர் சிவிகை பரித்தார். அக்குறளினை மறுத் தார்களாம். இதனுல் நமது அடிகள் குறளை மறுத்து விட்டாரென்றே தாழ்வுபடுத்திவிட்டாரென்றே சொல்லு தல் தவருகும். சிவிகைப் பரித்தாரைவிடச் சிவிகையூர்ந்தா

ராகிய சம்பந்தர் சிறந்தவர் என்பதும் அதனகத்து விளங்கிடக் கிடக்கின்றது.

இங்ஙனமாகக் குறளுக்கு விளக்கவுரை தந்த அடிகள் குறட்களையாண்ட இடங்களில் சில காண்பாம்:-

கிழவோன் வேட்கை தாங்கற் கருமை சாற்றல்
"பாலார் மொழியுமை பங்காளர் வெங்கையம்
பாவைதந்த
மாலாழ் தருமெனே வெவ்வுரை யானனப
வாட்டுகின்றாய்
காலாழ் களரி னமிழ்ந்தவெங் கோட்டுக்
களிற்றையொரு
வேலா லெறிபவர் போலே யிதுவென் விதிவசவே.
(திரு. கோ. 48)

இதில், "காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு"

என்ற குறளகத்து வந்த 'காலாழ் களரின் களிறு' என்றதை அப்படியே யாண்டுள்ளார் அடிகள்.

"......................................புலவர்
"இரப்பாரை யில்லா யீர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று" என்று
—உரைப்பாவில்
வைதலை யஞ்சி வளத்தார் இரப்பவர்தாம்
எய்தலை நோக்கி யிருந்துதவ"
(சிவ. தூது. 197-8)

இதில் முன்னிரண்டடிகளும் ஒரு குறள் இப்படிப் பல உள. விரிவஞ்சி விடுகின்றேம்.

தமிழ் மொழி வளர்ச்சி

—O—O—

பண்டித.
இராமசுப்பிரமணிய நாவலர்
(மால்முருகனார்)

நாகர்கோவில்.

ஒருமொழிக்கு வளரும் தன்மையாவது அம்மொழி நாள்தோறும் சொல்லிலுங் கருத்திலும் மேம்பட்டு வருதலும் அம்மொழி பேசுபவர் நாள்தோறும் பல்கி வருதலும் பல்கலை தழுவிய நூல்கள் ஆக்கம் பெற்றுச் சிறத்தலுமாம். இம் முத்திறமும் தமிழ் செவ்வளம் உடையதாக விளங்கி வருவதனல் அது வளர்ச்சியுறுகின்றது என்பதில் ஐயப்பாடு இல்லை. ஆயினும், தமிழ் பிற மொழியிற் காணும் பல சொற்களுக்கும் பிறமொழியாளர் கருத்தை விளங்கும் சொற்களுக்கும் புதியனவாய்க் கண்ட கலைகளுக்கு உரிய சொற்களுக்கும் நேரான சொற்களை உடையதன்று எனப் பலர் கூறுகின்றனர்கள். இக்குறை தமிழுக்கு மட்டும் அன்று, பிறபல மொழிகளுக்கும் உண்டு. உலக மக்கள் அனைவருடைய கருத்துக்களையுங்கொண்டதொரு மொழி இருப்பது அருமை. அத்தகையதொரு மொழி உண்டாயின், உலகில் பல்வகை மொழிகளின் தோற்றம் அருகிபிருக்கும். ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு முதலான மொழிகளை அடிப்படையாகவைத்துக்கொண்டு அவற்றில்உள்ள சொற்கள் தமிழில் இல்லை என்பது அதற்கு ஒரு குறை எனக் கருதத்தக்கதாகாது. தமிழை அடிப்படையாக வைத்து எண்ணின் தமிழின் கண் உள்ள பல சொற்களுக்கு நேரான சொல் ஆங்கிலம் முதலிய மொழிகளிலுங் காண்பது அரிதாகும்.

அன்பு, கடவுள், கண்ணேட்டம், காதல், வாய்மை, பயிர்ப்பு சால்பு முதலான தமிழ்ச் சொற்களுக்கு அம்மொழிகளில் நேரான சொற்கள் இல்லை. 'Love, god' முதலிய ஆங்கிலச் சொற்கள் ஈண்டுக் கூறிய சொற் பொருண்மைக்கு ஒத்தன ஆகா.

பிற மொழிகளில் உள்ள எழுத்துக்கள் பல (ஜஷ முத லியன b f z முதலியன) தமிழில் இல்லை என்பார் பலர். அப்பான்மைபோலவே தமிழில் உள்ள எ வு ழ ற ன ஃ என் பனவும் பிறபல மொழிகளில் இல்லை. ஆகவே, பிற மொழிச் சொற்களுக்கு நேரான சொற்கள் இன்மையும் பிறமொழி எழுத்துக்களின்மையும் ஒருமொழிக்குக்குறைஎனப்படாது தமிழ்ச்சொற்களும் எழுத்துக்களும் தமிழ்க்கலைகளையுந் தமிழ் நாகரிகத்தையும் தமிழ்நாட்டுப் பொருள்களையும் தமிழருள்ளத்தையும் உணர்த்தப்போதுமானவையாகஇருக் கின்றன. ஆதலால், தமிழ் ஒரு நிறைமொழி என்பது மிகையாகாது. மேலும் பிறமொழிக் கருத்துக்களை விளக் குஞ்சொற்கட்கும் எத்துணை விரிபொருள்களையும் சுருக்கிக் காட்டும் சொற்செறிவுந் தமிழ் மொழிக்கு இயல்பாகவே எய்திய இருபெருஞ் செல்வங்களாகும்.

இங்ஙனமாயின், உலகப்போக்கிற்கேற்ப வாழ்க்கை வேறுபடுமாகையால், அவ்வாழ்க்கைசிறந்துகாட்ட வேண்டு மாயின், அவ்வப்போது உலகிற்கு இன்றியமையாத சொல் வழக்குக்களைப் பேணியாகவேண்டும். இக்காலவுலகம் மேனாட்டாரது ஆராய்ச்சிகளையும் கலைகளையுந் தழுவி ஒழுகு வதனால் அவற்றை விளக்குவதற்கு உரியசொற்களைத் தமிழ் மட்டும்அன்று எல்லா மொழிகளும் பெற்றிருக்கவேண்டும் இக்காலம் மக்கட்குழுவினர் ஓரிடத்து ஒதுங்கிப் பிறநாட்

டுச்செய்தி உணராது வாழுங்காலமன்றுகையால், உலக முழுதும் வழங்கும் கலை கருத்துக்களுக்கு உரிய சொற்கள் எல்லா மொழிகளிலும் வேண்டும். தமிழிலும் வடநாட்டு மொழிகளிலும் உள்ள பல சொற்களை ஆங்கில முதலிய மொழிகள் தழுவிக்கொண்டன. இந்தியநாட்டுப் பொருள் களை விளக்குவதற்கும், இந்திய மக்களின் கருத்துக்களை விளக்குவதற்கும் உரிய பல சொற்களை அம்மொழிகள் புதியனவாய் ஆக்கிக்கொண்டன. இவ்வாறு செய்யாவிடின், மேனாட்டவர் இந்தியநாட்டுக் கலை கருத்துக்களைத் தம் மொழியில் விளக்க இயலாது; அவைவிளங்குதற்பொருட்டு அவர்கள் இந்திய மொழிகளைக் கற்றுகவேண்டும். அப்பான்மைபோலவே இந்திய நாட்டவர் மேனாட்டுக் கலைகருத்துக்களுக்கு உரிய சொற்களை ஆக்கிக்கொள்ளாவிடில், அவற்றை என்நாளும் மேனாட்டு மொழிகளிலேயே கற்கவும் கற்பிக்கவும் வேண்டும்.

இவ்வாறு பிறமொழிப் பயிற்சி வற்புறுத்தப்படுவதனால் தாய்மொழி கீழ்நிலை எய்தலாகின்றது: அன்றியும் பிற மொழிகளுக்கு அடிமைப்படவேண்டுவதாகின்றது. பிற மொழிகளையன்றி தனக்கென ஒரு மொழி இல்லாத நாடுகளும் தாய்மொழியைக் கையொருவிப் பிற மொழிகளையே புகலடைந்து நிற்கும் நாடுகளும் வானத்து முகிற்கூட்டங்கள் காற்றால் இருந்தவாறு தோற்றி விரைவில் அழிவது போல அழிந்துவிடும். மொழியுரிமையே வாக்குரிமை, நாகரிகநிலைபேறு, கருத்தொருமை, ஒற்றுமை, சமூகக்கொள்கை வாழ்க்கைச் சிறப்பு ஆட்சிஉட்கு முதலியவற்றிற் தக்காரணமாகும். பிற நாட்டவருடைய ஆட்சியையும் அடக்குமுறைகளையும் நீக்குவதற்கு உரிய சிறந்த படை (ஆயுதம்) தாய்மொழியே யாகும். எனவே, பிற நாட்டுக் கலைகளையுங்

கருத்துக்களையுந் தாய்மொழியிற் கொள்ளாதும் அவற்றின் பொருட்டுப் பிறமொழியே போற்றியும் தம் உரிமையைப் பாதுகாப்பதொன்று, அல்லது பிற மொழிச் சொற்களுக்கு நேரான சொற்களை ஆக்கித் தாய்மொழி பேணிப் பிற மொழிகளைவேண்டுமளவில்மட்டும் பயின்றுதம் உரிமையை பாதுகாப்பது ஒன்று ஆகிய இவற்றுள் ஒன்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இக்கால ஒழுக்கை நோக்கும் பொழுது, இங்கிலாந்து அமெரிக்கா, ஜர்மனி, ஜப்பான், உருசியா முதலிய நாட்டு மொழிகளையும் அந்நாட்டில் விளங்கும் மேற்கூறிய கலைகளையும் தற்காப்பை விரும்பும் நாட்டாட்சிக் குழுவினர் உணரல் வேண்டும் என்பது விளங்கும். அவ்வகைக் கலைகளை இந்திய நாடு உணரும் பொழுது, பிற நாட்டவர்களும் இந்திய நாட்டு மொழிகளைக் கற்றல் இன்றியமையாதது ஆகும்.

மேல், ஒரு மொழிக்கு வேண்டும் பொதுவமைதியைக் கூறினோம். இனித் தமிழ் மொழியை அப்பொது அமைதிப் பாற் படுக்கும் நெறிகளை ஆராய்வோம். தமிழ் மொழியில் உள்ள சொற்கள் பிற நாடுகளில் விளங்கும் எல்லாப் பொருள்களையும் எல்லாக் கலைகளையும் உணர்த்தப்போது வன அல்ல. அவற்றுள் தமிழர்க்குப் பயன்படாதவற்றை, நீக்கி மற்றெல்லாவற்றிற்கும் உரிய சொல் தமிழில் வழங்க வேண்டும். அச் சொற்கள் தமிழில் வழங்குவது காறும் தமிழ் பிறநாடுகளோடு கலை கருத்துக்களால் தொடர் பின்றியும் இனிவரும் பொது வாழ்க்கை நெறிக்குப் பெரிதுப் பயன்படாதுமே ஒருவி நிற்கும். மேனாட்டு நாகரிகம் வீ ளிலும் புகுந்து நடமிடுவதனால், தாய்மொழி ஆகிய தமிழை வீட்டிலும் முழுதொருங்கு வழங்க இயலாதுபோம். இம்பொழுதும் தமிழ் மக்களுடைய உறைவிடங்களில்

மகளிரும் இளைஞரும் ஆங்கிலச் சொற்களை வழங்குவது அச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் அவர்க்கு எளிதில் அகப்படாமையாலும் ஆங்கில மொழியின் வரம்பற்ற வழக்காற்றாலுமாம் உலகப் போக்கிற்கு ஏற்ப வாழ்க்கையையும், மொழியையும் அமைத்துக்கொள்வதே அறிவுடைமையாம். அவற்றின் பொருட்டு உலகப் போக்கு வேறுபடாது. 'நெல்லரிசியே உண்போம் என்பவர் பிற தானியங்களையும் இக்காலத்து உண்டேயாகவேண்டும் கிராமத்திலேயே வாழ்வோம்' என் பவர் இனி நகரங்களிலேயே வாழவேண்டுவதும் உண்டாம், 'ஆங்கிலமே கல்லோம்' என்றவர் அதுவே கற்கவேண்டுங் காலம் முன்னிட்டுவிட்டது. இப் பான்மைகளும் இனி வேறுபடலாகும். வேறுபடின் வேறுபட்டவாறு ஒழுகு வதே செய்யத்தக்கது. உலகப் போக்குக்கு வேறுபட்ட நடையால் வாழ இயலாது. ஆகவே, உலகியலுக்கு ஒத்த வாறு மொழிகளிலும் சில வேறுபாடுகள் தலைவருவது இயல்பு. உலகப் போக்குக்கு ஏற்றவாறு மொழிப் போக் கில் சில வேறுபாடுகளைச் செய்வதிலும் குற்றம் இன்றாம் 'தமிழில், ஒரு சொல்லைக் குறைத்தலும் செய்யோம்', கூட்டலுஞ் செய்யோம், என்னும் விடாப் பிடி பெரும் பயன் தராது. அவ்வேறுபாடுகளைச் செய்யும் பொழுது தமிழரது நாகரிகம், ஒலியியல்பு, உள்ளப்பான்மை, ஒலியுறுப்புக்களின் பொருத்தமுடைமை, தமிழின் தனி நயம், நடை முதலியவற்றில் இழுக்குவராது பேண வேண்டும். ஒரு மொழி ஒரு குழுவினருடைய ஒலி யியல்பு உள்ள வியல்பு முதலியவற்றுக்கு இணங்கவே தோன்றுகின்றது என்பது மொழி நூலுண்மையாதலால் ஒலியியல்பு முதலியவற்றுக்கு முற்றிலும் வேறுபட்ட சொற் கள் எம்மொழியிலும் வழங்கத்தக்கன அல்ல. மீறிப்

பெருக வழங்க முனைந்தால், அம் மொழிப் பண்பு விரைந்து கெடும்; உறுதியுற்ற மொழியாயின் அம் மொழி தனது முன்னைய வடிவிலேயே விளங்கி நிற்பப் புதியன புகுத்திய சொற்றிரள் ஈண்டிப் பிறிதொரு மொழியாய்ப் பிறக்கும். இங்ஙனம் வருதற்கு, இடைக்காலத்துத் தமிழைச் சிதைத்து வழங்கத் தலைப்பட்டமையால் மலையாளம், தெலுங்கு முதலிய மொழிகள் பிறந்தமை தகுந்த எடுத்துக் காட்டுக்கள் ஆகும். எனவே, தமிழை வளம்படுத்த முயல்வதன் கண், தமிழின் பொதுப்பான்மையும் தமிழ் நயமும் சிதையாது பேணப்படுதல் வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு நெறியின்றித் தாம் விழைந்தவாறு தமிழைப் புதுச் சொற்களால் ஆக்கஞ் செய்ய முயல்வதை நாம் முற்றிலும் மறுக்கின்றோம். பிறர் எவ்வாறு கருதினும், கருதுக. அக் கருத்தின் மேல் பன்முறை ஆராயுமாறு நாம் அவரை வேண்டுகின்றோம்.

பல நாட்டவர்களும் தந்தம் மொழியையே பேணி உயர் வடைந்திருக்கின்றனர். மொழிச் சிறப்பில்லாத நிலப் பகுதிகள் இன்றும் சீரும் சிறப்புங்குன்றி நாகரிகம் இன்றி இருக்கின்றன. சைன சப்பான் பர்மா முதலிய நாடுகள் தம் மொழிகளை நன்கனம் பேணி உயர்வடைந்திருக்கின்றன. தமக்கெனச் சிறந்த மொழி இல்லாத நாடுகள் கருத்தை விளக்கும் கருவியின்றிச் சீரழிந்து விடும். பிறமொழிகளையே எதிர்நோக்கும் நாடுகளும் அத்தகையனவே.

தமிழ் சிறந்திருந்த காலத்துத் தமிழ்மக்கள் வாழ்வு நாகரிக முதலியவற்றால் சிறந்து காட்டியது என்னும் உண்மையை நாம்தொன்னூலிலக்கணவாயிலாகஉணர்கின்றோம்.

தமிழில் வடமொழி புகுந்த காலமுதற்கொண்டு தமிழ் நாகரிகம் சிதையத் தலைப்பட்டது. பிற நாட்டு மக்கள் குடியேற்றமும் பிறமொழி பரவுதலும் ஒரு நாட்டின் தனிப் பண்பைக் கெடுத்துவிடும். இன்று தமிழ் நாட்டில் தமிழ் நாகரிகம் பெயரளவில் மட்டுமே பேசப்படுகின்றது. தமிழர் மேற்கொண்ட சடங்குகளும் வாழ்க்கை முறைகளும் (வடநாட்டு) ஆரிய மணங்கலந்து விளங்குகின்றன. மணமுறை, ஈமச் சடங்கு, விரதங்கள் முதலியன எல்லாம் ஆரிய முறையிலேயே புரியப்படுகின்றன. வடமொழி மறை (மந்திரம்) மொழி கிளத்தல், நெருப்பைச் சான்றாகக் கோடல், மங்கல நாண் பூட்டல் முதலியன தமிழர்க்குரிய மணச்சடங்குகள் அல்ல. கல்லெடுத்தல். திதியளித்தல் மயிர் களைதல் முதலிய ஈமச் சடங்குகளும் தமிழர்க்கு உரியனவே அல்ல. இவை வடமொழி நூல்களை அடியொற்றியவை; ஆரியரால் புகுத்தப்பட்டவை. தமிழர்களுடைய சடங்கு முறைகள் அறவே மறக்கப்பட்டு விட்டமையால், இன்னவை என்று கூட இக் காலத்து அறியக் கூடவில்லை. இரண்டாயிரம் யாண்டுகளுக்கு முன்னமே ஆரிய நெறிமுறை தமிழரிடை வேரூன்றி விட்டது. தொல்காப்பிய காலத்தில் ஆரிய மணம் தமிழ்த் தென்றலில் கெழுமத் தொடங்கிவிட்டது, ஆரியர் தேவர் என்பதும் ஆரியம் தெய்வமொழி என்பதும் தமிழர்களால் இன்னும் மறக்கப்படவில்லை. ஆரியத்தினிடத்துத் தெய்வத் தன்மை கற்பித்தமையே அம்மொழி தமிழில் மிகுதியாக இடம்பெறுவதற்குக் காரணமாயிற்று. இலக்கண நூலார் பலர் தமிழில் வட சொற்களை வழங்குவதற்கு விதிகள் இயற்றினர்; சிலர் வடமொழி இலக்கண நுட்பங்களைத் தமிழில் காட்டினர்; சிலர் வடமொழி இலக்கண நெறிகளையே தமிழுக்கும் உரிமை செய்யத் தலைப்பட்டனர். இவ்வுண்

மையை வீர சோழியம் பிரயோக விவேகம் முதலிய இலக்கண நூல்களிற் காணலாகும். வடமொழி தமிழ் நாட்டில் பரந்து பயின்றமை காரணமாக அவ் விலக்கணங்கள் தோன்றினவாகலின், அவற்றின் ஆசிரியர்களைப் பழிப்பதற்கு இல்லை. ஆயினும், தமிழ் வேற்றுமைகளுக்குச் சுபந்தம் (ஸுப் அந்தம்) பொருத்தி இலக்கணம் கூறவந்த ஆசிரியர்களுடைய உள்ளத்துணிவு சிறிது கைகடந்தது என்னுதிருக்க உள்ளம் முன்னுதிருக்க முடியவில்லை.

ஆங்கில மொழி பிற மொழிகளை எல்லாம் தழுவிக்கொள்வதனால் மிக முன்னேறிவிட்டது என்று பலர் கூறுகின்றனர். அக் கூற்று முற்றிலுந் தவறுகும் இலத்தின் பிரஞ்சு முதலிய மொழிகள் ஆங்கிலத்தில் புகுந்து அதனுடன் கலக்க முனைந்த பொழுது ஆங்கில அரசர் ஹென்றி (Henry) எட்டாமவரும் ஆங்கில மக்களும் ஆங்கிலத்தைப் பாதுகாக்கப்பட்ட பாடுகளை நாம் சரித்திர வாயிலாக அறிகின்றோம். தம் நாட்டையும் தம் மொழியையும் தம் முடைமைகளையும் தம்முரிமையையும் விட்டுக் கொடுக்க விரும்புவர் உலகில் அரியரேயாவர். பன் முயற்சிகள் ஆற்றித் தகைத்து ஆங்கிலத்தில் பன்மொழிச் சொற்கள் கலப்பதற்கு, ஆங்கிலருடைய பல் நாட்டுக் கூட்டுறவே காரணம். அவரால் தடுக்க இயலாதவாறு பிற சொற்கள் புகத் தலைப்பட்டமை நோக்கி அவர்கள் அச்சொற்களை ஆங்கிலப் பண்பு கெடாமல் தம் மொழியில் அமைத்துக் கொண்டார்கள். தமிழ் மக்களோ எனில், கூட்டுறவு முதலிய இன்றியமையாத காரணங்கள் இல்லாமலேயே, பிறர் கண்டு நகைத்துப் பொழுது போக்க வேண்டுமென்று கருதியும் பிறமொழிகளிலுந் தமக்கு பயிற்சி உண்டு என்பதை அறிய வேண்டுமென்று உன்னி

யும் உலகப் பேச்சின் ஊடாடும் பிறமொழிச் சொற்களைப் புகுத்தினுல் மொழியாவர்க்கும் எளிதாகிவளம்படும் என்று முன்னியும் பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப் பண்பு சிதைத்து வழங்கத் தலைப்பட்டிருக்கிறார்கள், பண்டிதன், ஸம்ஸ்கிருதம் முதலிய மொழிகள் அவ்வாறே ஆங்கிலத்தில் வழங்கப் படுவதில்லை. அவை (Pandit) ஸான்ஸ்க்ரிட் (SansKriet) என ஆங்கிலப் பண்புக்கு இணங்கவே வழங்கப் படுகின்றன. கயிறு (Coir) தஞ்சாவூர் (Tanjore) அயோத்யா (Oude) பஞ்ச (Penta) அஷ்ட (Octo) சப்த (Septa) தச (Deci) கோணம் (Gone) என்பன முதலியனவும் ஆங்கில மொழிக்கேற்ப ஒலிக்கப்படுவது காணத்தக்கது, பல வட மொழிச் சொற்கள் இலத்தின் முதலிய மொழிகளில் சென்று வேறுபட்டுப்பின் ஆங்கிலத்தில் புகுந்துள்ளன,

பிறமொழிச்சொற்களை ஒலிப்பதற்கெனப் பிறமொழி எழுத்துக்களை ஆங்கிலர்கைக் கொள்வதில்லை. மொழியின் அடிப்படையாகிய எழுத்தில் ஆக்க அழிவுகளைச் செய்தலும் வேறுபாடுகளைச் செய்தலும் மொழிநயத்தைக் கெடுத்து விடும் என்னும் உண்மையை அவர்கள் நன்கு அறிந்திருக்கின்றனர்.

தமிழ்மக்கள் வடசொற்களையும் ஆங்கில முதலிய மொழிகளில் உள்ள சொற்களையும் வழங்குவதற்கெனத் தமிழில் எழுத்துக்களைப் பிறமொழிகளிலிருந்தே பெற்றுக் கொள்ளவேண்டும் என்கின்றனர். இவ்வாறு கூறுவோர் பெரும்பாலோர் தமிழ்ஆரியர் என்பதை நாம் ஈண்டு மறக்கக் கூடாது. அவர்கள் முகம் (வ) வேகம் (ர) மாசம் (ஸ)விசயம் (ஜ) வருஷம் (ஷ) முதலிய செற்களை வடமெழியிற் போல வழங்கும் பொருட்டு வர முதலிய எழுத்துக்களைத் தமிழில் கைக்கொள்ளவேண்டும் என்கின்றனர். தமிழில்

பிறபலமொழிச் சொற்களும் வழங்கி வருவதனுல் அவற்றுக் கேற்ற பிறமொழி எழுத்துக்கள் எல்லாவற்றையுந் தமிழ் தழுவவேண்டும் என்றும் பலர் கூற இனித்தலைப்பட்டு விடுவர் போலும்! Physiology என்பதை Phi ஸியா loஜிஎன் றும், ACid என்பதை Aஸிd எனவும் Symbol என்பதை Syம் boல்என்றும் Size என்பதை ஸைz என்றும் வழங்க முன்னி டுவராயின், வருந்தத்தக்கதே. அவ்வாறு முன்னிடினும் தமிழில் மட்டும் அன்று, எம் மொழியிலும் புத்தெழுத் தாக்கத்கத்தால் மொழியின் குறைபாடுகளை நீக்கிக்கொள்ள இயலாது. இவ்வுண்மையை அறிந்தே ஆங்கில எழுத்துக் களை மிகுக்க நினையாமல் ஓரெழுத்துக்கே பல ஒலிகளை அமைத்துக்கொண்டார்கள். தமிழில்அதற்கும் இடனில்லை. இயலுமிடத்து, பிறமொழிச் சொற்களைத் தமிழிற் பெயர்த்து வழங்கவேண்டும் இயலாவிடத்துப்பிற மொழிச் சொற்களைத் தமிழ் எழுத்துக்களால் வழங்க வேண்டும். தொடக்கத்தில், அவ்வாறு செய்தல் அரிதாகத் தோன்ற லாம். பிறமொழியைக்கற்பது எவ்வளவு அரிதோ அவ்வளவு அரிதன்று இது. ஒருமொழியில் பிறமொழிகளைப் பெயர்த்து வழங்கின் யார்க்கும் பொருள் எளிது விளங்காது என்பார் இன்று பலர் உளர் பிறமொழிகளைப் பயில்வது எளிதன்று தான். எச்சொல்லின் பொருளும் விளங்காதிருந்த காலத்தில் தான் நாம் முயன்று சொற்களைப் பன்முறை உருவிட்டுப் பிறமொழிகளைக் கற்ருேம். அம்முயற்சி வருத்தம் பயப்பது என்றுநாம் நீக்கி விட்டோமில்லை. அதுபோலவே பிறமொழி களைத் தமிழில் பெயர்த்துக் கற்பதிலும் முயற்சி வருத்தம் பேணலாகாது. ஒவ்வொருவருக்கு தத்தம் எளிமையை நோக்கின், மக்கட் பெருங்குழுவின் பொதுநலத்தை நாம் நோக்காதிருப்பது போலாம்.

ஆங்கிலம் மிக வளம்படுவதற்கு காரணம் அம்மொழிப் பயிற்சியின் இன்றியமையாமையை ஆங்கிலர் எல்லா நாடுகளிலும் ஆக்கிக்கொண்டமையாகும். அன்றி, ஆங்கிலத்தில் பிறமொழிச்சொற்கள் தழுவப்படுவது அன்று. இயந்திரம், கருவிகள், ஆடை, பொதுப்பொருள்கள் முதலியவற்றைச் செய்து அவற்றை விற்றல் வாயிலாகப் பிற நாடுகளுடன் கூட்டுறவு செய்தல், தமது மதம் நாகரிகம் முதலியனவற்றைப் பிறநாடுகளில் தம்மொழியுடன் பரப்பும் பொருட்டு பெருஞ் செலவு செய்து அருமுயற்சி ஆற்றல், தமக்கு வழங்கலாகும் இடங்களில் ஆங்கிலக் கல்விச்சாலைகளை நிறுவல், ஆங்கிலப் பரீட்சைகளில் தேர்ந்தவர்கட்குச் சிறந்த உத்தியோகமும் உயர்வுமளித்தல், பல நாடுகளை அடிப்படுத்தி அவற்றில் ஆங்கிலக்கல்வியைப் பரப்புதல் முதலியனவே ஆங்கிலம் முன்னேறுவதற்குக் காரணமாம், நம் நாட்டில் இருந்து ஆங்கிலநாடு சென்று ஆங்கில பரீட்சைகட்கு நம்மக்கள் கற்கப்போவது ஆங்கிலத்தில் பிறசொற்கள் மிகுதியாக கலந்திருப்பதனலா அல்லது ஆங்கிலப் பரீட்சைகளால் தமக்கு உயர்வு எய்துமென்று கருதியா, கருதிப் பார்மின். தமிழும் மேற்கூறியவாறு பல்

செந்தமிழ் இதழ் பல அரிய செய்திகளைத் தாங்கி வருவதை தமிழுலகம் நன்கு அறியும். பல புதிய மாற்றங்களோடும் பொலிவோடும் செந்தமிழ் இதழ் மாற்றப்பட்டுள்ளது. ஆண்டுச் சந்தா ரூபாய் ஐந்தேதான். எனவே ஒவ்வொரு தமிழ்மகனின் கையிலும் அது திகழவேண்டுமன்றோ? ஒவ்வொருவரும் ஓரிரு நண்பர்களைச் செந்தமிழுக்குச் சந்தாதாரர் ஆக்கி உதவுங்கள். அது தமிழுக்குச் செய்த தொண்டு தமிழர்க்குச் செய்த தொண்டாகும்.

—பொறுப்பாசிரியர்

வகை நெறிகளில் பிறநாடுகளில் பரப்பப்பட்டு அரசியல் ஆதரவும் பெறுமாகில், முன்னேறுவதில் தடையில்லை. தமிழ் மட்டும் அன்று, எம்மொழியும் அந்நெறியில் முன்னேறுவதில் ஐயமின்று. ஆகவே தமிழ் முன்னேற்றங் கருதி மட்டும் பிறமொழிச்சொற்களை அதன்கண் வரம்பின்றிப் புகுத்த வேண்டுவதில்லை.

வடமொழியாளருடைய முயற்சியால், சில மொழிகளில், வடமொழிவிகுதிகளோடு வழங்கும் மணிப்பிரவாள நடை என்பதொன்று வழங்கி வருகிறது. மலையாளத்தில் இதன் மிகுதியைப் பார்க்கலாகும். தமிழிலும் வைணவ சமய ஆசிரியர்கள் சிலர் இந்நடையை மேற்கொண்டு தமிழை வேண்டுமளவு சிதைத்திருக்கிறார்கள். இந்நடையைத் தெய்வத் தன்மையுடைய தென்று பலர் பேற்றிவருகின்றனர் இவ்விதத்தால் என்பதை 'ஏவம் விதேந, எனவும் 'காலத்தில், என்பதைக் 'காலே, எனவும் பிறவாறாகவும் வழங்குவதனால் தமிழுக்கு உண்டாம் சிறந்த ஆக்கந்தான் யாது என்று நாம் வினவுகின்றோம்.

உலகியற் பேச்சில் வழங்கும் இழிமொழிகளை (கொச்சைகள்) வழங்குவதே மொழிக்கு ஆக்கமென்று கருதிப் பத்திரிகைகளிலும் நூல்களிலும் சொற்பொழிவுகளிலும் அவற்றைப் பரக்க வழங்கும் பான்மையோர் இக்காலத்துப் பலராயினர். இவர்கட்கு எல்லாம் தமிழ்மொழியின் கண்

திருத்தம்

செந்தமிழ் தொகுதி 60 இதழ் 10–12 இல் 'மெய்க்கீர்த்தி' என்ற கட்டுரையில் பின்வரும் திருத்தத்தைச் செய்துகொள்க.

பக்கம் 153: குணவீரபண்டிதர் என்பதற்குப் பதிலாக வச்சநந்தி முனிவர் எனப்படிக்கவும்.

பக்கம் 154 வச்சநந்தி முனிவர் என்பதை நீக்கிப் படிக்கவும்

நுண்ணுணர்ச்சியும் இல்லை; இவர் தமிழ் நயமும் உணரார் தாம் கற்ற சிறுகல்வியைக் கருவியாகக் கொண்டு எழுத்தாளர் என்னும் புகழ் பெறும் பொருட்டு இவர்கள் உள்ளம் போனவாறு எழுதிவிடுகின்றனர்.

யாவர்க்கும் விளங்கத் தக்கதொருநடையை மேற்கொள்ளவேண்டும் என்பது நுட்ப ஆராய்ச்சியின் மேற்கூறப்படுங் கூற்றாகத் தோன்றவில்லை. உலகிற் பெரும்பான்மையோர் சிறந்த கல்வி இல்லாதவராகவே காணப்படுவது இயல்பு. 'பொதுமக்கள்' என்னுஞ் சொல்லிற்கே 'அறிவில்லாத மக்கள்' என்று பழைய நூல்களில் உரை கூறப்பட்டிருக்கின்றது. இந்நுட்பத்தை உணர்ந்தே பொதுமக்கள் வழி உலகைச் செல்லவிடாது சான்றோர் வழிச்செல்லுமாறு முன்னோர் முயன்றனர், 'உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே நிகழ்ச்சியவர்கட்டாகலான' என்பது நோக்குக. இந்நெறியை வகுத்துப் பொதுமக்கள் வழி மொழிகளையுங் கலைகளையும் செல்விக்கப் முயல்வது அவற்றுக்கு அழிவைத் தேடுவதாகும் என்பது ஒருதலை. இசைக் கலையைப் பார்ப்போம். இலக்கணநெறியில் இனிது பாடுவோர் உலகில் மிக அரியர். ஆகவே, பொதுமக்கள் தம் உள்ளம் போனவாறு ஒரு'நெறியின்றிப் பாடுவன எல்லாம் இசைக்கலையில் இடம்பெற வேண்டும் எனில், அக்கலை சின்

(தொடரும்)

செந்தமிழ் இதழுக்கு மொழி, வரலாறு, அறிவியல், திறனாய்வு, கல்வெட்டு, ஆராய்ச்சி, இலக்கியம் என ஆக்கப்பூர்வமான கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன கட்டுரை எழுதுவோர் தாளின் ஒரேபக்கத்தில் தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

—பொறுப்பாசிரியர்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

பாண்டியன் நூலகம்

புத்தகப் பட்டியல்

68.	தமிழ் முதல் இலக்கணம்	கே. வெங்கட்ராமஐயர் பி. ஏ.
69.	ஐந்திலக்கணம்	பவணந்தி முனிவர்
70.	தமிழ் இலக்கணம்	—
71.	Manual of General Tamil	—
72.	இலக்கணக் கோவை	எம். சுந்தரமுதலியார்
73.	இலக்கண இலக்கியத் திறவுகோல்	மணி. திருநாவுக்கரசு முதலியார்
75	இலக்கணக் கோவை	எம். சுந்தர முதலியார்
76.	மாணவர் உயர்தர இலக்கணம் முதற்பாகம்	ஜே. ஜி, சுந்தரம்
77.	வீரசோழியம்	புத்தமித்திரன்
78.	இலக்கண நூல் முதலாம் பங்கு	
	இலக்கண வினு-விடை	ஜீ. யூ. போப்பையர்
79.	கொடுந்தமிழ்	வீரமாமுனிவர்
80.	Lower Secondary Tamil Grammer	P. Vasudeva mudaliar
81.	இலக்கண விளக்கம் உரையுடன்	வைத்தியநாததேசிகர்

82.	மகாநவராத்திரி மகோத்சவத்தில்	பலவித்துவான்கள்
83.	காலங்காட்டும் இடைநிலை	அகமது அமானி சாஹிப்
84.	திருக்கலம்பக மூலமும் உரையும்	உதீசி தேவர்
85.	திராவிட மொழியின் மூவிடப் பெயர்	வி. வேங்கடராஜுலு ரெட்டியார்
86.	பிரயோக விவேகம் மூலமுமுரையும்	சுப்பிரமணிய தீக்ஷிதர்
87.	நன்னூல் மூலமும் உரையும்	பவணந்தி முனிவர்
88.	பொதுப்பாயிரம் முதலாவது எழுத்ததிகாரம்	—
89.	செந்தமிழ் (சொல்லியல், இனவியல்)	—
90.	பதினோராவது நிகண்டு	—
91.	சேந்தன் திவாகரம்	ப. ஆ. தாண்டவராய முதலியார்
92.	நேமிநாத மூலமும் உரையும்	குணவீரபண்டிதர்
93.	தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரை	ரா. இராகவஐயங்கார்
94.	தொல்காப்பியம் இளம்பூரணம்	வ. உ. சிதம்பரம் பிள்ளை
95.	தொல்காப்பியம் நச்சினார்க்கினியர்	ரா. இராகவ ஐயங்கார்.
96.	எழுத்ததிகாரம், பொருளதிகாரம்	—
97.	சூடாமணி நிகண்டு மூலமும் உரையும்	நா. கதிரைவேற் பிள்ளை
98.	பொருட்டொகை நிகண்டு	சுப்பிரமணிய பாரதி
99.	,,	,,
100.	,,	,,
101.	,,	,,

102.	,,	,,
103.	இறையனார் அகப்பொருள் நக்கீரனார் உரையுடன்	ப. ஆ. பவானந்தம் பிள்ளை

வரலாறு

1.	உலக வரலாறு 1-ம் பாகம்	த. இராமநாதபிள்ளை
2.	இந்தியர் வரலாறு முதல் புத்தகம்	எஸ். கே. கோவிந்தசுவாமி பிள்ளை
3.	மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம் முதல் பாகம்	உ. வே. சாமிநாதஐயர்
4.	ஹிட்லரும் மகாயுத்தமும்	ஏ. ஜி. வெங்கடாச்சாரி
5.	கர்நாடக ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம்	வி. ஆர், ராமச்சந்திர தீச்சிதர்
6.	ஜெகதீச சந்திரபோஸ்	சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்
7.	தேசயாத்திரையின் சரித்திரம்	பகடாலநரசிம்மலு நாயுடு
8.	விவேகானந்த சரிதம்	கேதாரேஸ்வராநந்த
9.	பண்டித மோதிலால் நேரு	வே. சாமிநாதசர்மா
10.	நெப்போலியன் சரித்திரம்	ந. மு. உசேன்கான்
11.	முதலாம் ராஜராஜ சோழன்	கிருஷ்ணசாமிசர்மா
12.	பண்டித ஜவர்கல்லால் நேரு	நேஷனல் பப்லிஷிங் கம்பெனி
13.	ஜப்பான் சரித்திர சுருக்கம்	ஜி. சுப்பிரமணிய ஐயர்
14.	மகான் மணி ஐயர்	கே. சுந்தரராகவன்
15.	அரசஞ்சண்முகனார்	ச. சாம்பசிவம்
16.	சத்திய சோதனை முதற் புத்தகம்	மகாத்மா காந்தி

17.	வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி	ந. சுப்பிரமணி
18.	கௌதம புத்தர்	—
19.	சிவாஜி மகாராஜா	கிருஷ்ணசாமி சர்மா
20.	தாமஸ் ஆல்வா எடிசன்	க. ப. சந்தோஷம்
21.	சந்திரகுப்த சரித்திரம்	வி. பாலம்மாள்
22.	புத்த சரித்திரம்	உ. வே. சாமிநாதஐயர்
23	அக்பர்	தி. செல்வக்கேசவ முதலியார்
24.	மாஜினி சரித்திரமும் மனிதர் கடமைகளும்	எம். ஆர். ஜம்புநாதன்
25.	பச்சையப்ப முதலியார்	சீனிவாச பிள்ளை
26.	ஆறுமுகநாவலர் சரித்திரம்	த. கைலாச பிள்ளை
27.	தமிழ்ப்புலவர்கள் வரலாறு 16ம் நூற்றுண்டு	எஸ். சோமசுந்திரதேசிகர்
28.	பண்டித மோதிலால் நேரு	சாமிநாத சர்மா
29.	இலங்கை சரித்திரம் (ஆங்கிலேயர் காலம்)	F. X. C. நடராஜா
30.	பிற்கால சோழர் சரித்திரம் பகுதி 2	டி. வி. சதாசிவபண்டாரம்
31.	குமாரசுவாமிப் புலவர் சரித்திரம்	சி. கணேச ஐயர்
32.	கனம் கிருஷ்ண ஐயர்	உ. வே. சாமிநாத ஐயர்
33.	சிவகங்கை சரித்திர கும்மியும் அம்மானையும்	டி. சந்திரசேகரன்
34.	மேன்மக்கள் சரித்திரம்	சு. இரத்தினசாமி ஐயர்
35.	ஹிட்லர்	சாமிநாத சர்மா